**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.37/2021 - DW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.ரமணி |
| Husband/Father Name | திரு.லோகநாதன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **19.01.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். வாதிக்கும், எனக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதியின் கணவருக்கும், எனக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதி, வாதியின் கணவர் மற்றும் என் மகன் லோகேஷ் ஆகியோருக்கிடையில் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து 24.11.1995 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி எனக்கு கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 24.11.1995 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் தான் என் கணவர் லோகநாதன் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அந்த 24.11.1995 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். என் கணவர் லோகநாதன் உயிரோடு இருந்த போது தோல் தொழிற்சாலை, மணல் குவாரி, மதுபானக்கடை போன்ற வியாபாரங்கள் செய்து வந்தார் என்றால் சரிதான். எங்களுக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் என்றால் சரிதான். என் மூத்த மகன் ராஜீ வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். என் 2-வது மகன் லோகேஷ் ஆற்காட்டில் உணவகம் நடத்திவருகிறார் என்றால் சரிதான். மகளுக்கு திருமணமாகி அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார். என் கணவர் லோகநாதனுக்கு திருவலம் என்ற ஊர் தான் பூர்வீகம் என்றால் அவருக்கு ஆற்காடு தான் பூர்வீகம். வழக்கு சொத்தின் பேரில் HDB பைனான்ஸ் நிறுவனத்தில் 02.07.2014-ம் தேதி அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்து அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஒப்படைத்து கடன் வாங்கியிருக்கிறேன் என்றால் என் பெயரில் ஆவணம் எழுதிக்கொடுத்திருந்தாலும் என் மகன் தான் கடன் வாங்கினார். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த 02.07.2014-ம் தேதியிட்ட அடமானப்பத்திரத்தின் இணையதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி அவரது வழக்கறிஞர் மூலம் எனக்கு 03.06.2021–ம் தேதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டு உடனடியாக பதில் கொடுக்காமல் 21.06.2021–ம் தேதி தான் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வாதி 14.06.2021–ம் தேதி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நான் பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப்பத்திர சாட்சிகள் குணாளன், ஜெயலலிதா ஆகியோருடன் எனக்கு விரோதம் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 அடமானப்பத்திரத்தில் ரமணி என போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் ரமணி என போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் உள்ள கையெழுத்தை ஆய்வு செய்வதற்கு என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவுடன் லேமினேஷன் செய்யப்பட்ட என்னுடைய கடவுசீட்டை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்னுடைய ஒரே ஒரு கையெழுத்து மட்டும் இருந்தது என்றால் சரிதான். அந்த மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பேரில் கையெழுத்து நிபுணரின் ஆய்விற்கு ஆவணங்கள் அனுப்பப்பட்ட பிறகு மேலும் கூடுதலாக சம காலத்திய கையெழுத்துகள் உள்ள ஆவணங்கள் கேட்கப்பட்டு எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்திலுள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை என நிரூபணம் செய்ய அதன் பிறகு வேறு நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

காவல் நிலையத்தில் வாதியின் கணவர் என் மீது புகார் கொடுத்ததாகவும், அதன் பேரில் என்னை அழைத்து விசாரித்ததாகவும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதற்கு, எந்த தேதியில் யார் யார் காவல் நிலையம் சென்றோம் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் மகன் லோகேஷை காவல் நிலையத்தில் அந்த புகார் சம்மந்தமாக வைத்திருந்ததால் நான் காவல் நிலையம் சென்று நான் ஜாமீன் கையெழுத்து போட்டு என் மகனை அழைத்து வந்தேன். வழக்கு சொத்து ரூபாய் ஒரு கோடி வரை மதிப்புள்ளது என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் மாமனார் அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்தவர் என்றால் ஆமாம். (பின்னர் சாட்சி அது பற்றி தனக்கு தெரியாது எனக் கூறுகிறார்.) இந்த வழக்கை தாக்கல் செய்தவர் யார், அவரது குடும்ப பின்னணி என்ன என்பது பற்றி நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. வாதியின் குடும்பம் பற்றிய விவரங்களை என் வழக்கறிஞருக்கு நானும், என் மகனும் தகவல் சொன்னோம். கடந்த 25 வருடங்களாக வாதி மற்றும் அவரது குடும்பத்தினரை எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக அவர்களை எனக்கு தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

வழக்கு சொத்து என்னுடைய தனிப்பட்ட சொத்து என்பதால் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை நான் வாதிக்கு 03.02.2021–ம் தேதி எழுதிக்கொடுத்து ரூ.50,50,000/–க்கு விலை நிர்ணயம் செய்து அன்றைய தினமே ரூ.50,00,000/– முன்பணமாக வாதியிடம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் படி ரூ.50 லட்சம் முன்பணம் பெற்றுக்கொண்டு தற்போது அதை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் படி வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி அவருக்கு தீர்ப்பு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என்னுயை பதில் அறிவிப்பு மற்றும் எதிர் வழக்குரை ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் வாதியை ஏமாற்றுவதற்காக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கிரைய பாக்கி தொகை ரூ.50 ஆயிரத்தை என்னிடம் கொடுக்க பலமுறை கேட்டும் நான் வாங்க மறுத்து தவிர்த்து வந்துள்ளேன் என்றாலும் வாதி கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் படி பாக்கி கிரையத் தொகையை கொடுத்து கிரையப்பத்திரத்தை பதிவு செய்து கொள்ள எப்போதும் தயாராக இருந்துள்ளார் என்றாலும் நான் தான் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் படி செயல்பட தவறியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை;–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.